Subscription.
Inland: Rs. 50/- per year.
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 21 April 1989 No. 16
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

UNDELIVERED ISSUES
Please re-address all undelivered issues of
The MORNING STAR'
To. The Manager,
"Morning Star"
182, First Cross Street,
JAFFNA.

## Day Care Centre, Mahilchipuram.

Mahilchipuram is a new colony of settlers about six miles to the south of Mankulam. Recently the Diocese constructed a well for the community in their midst. The pressure to start a Day Care Centre for the community could not be resisted as the need was so obvious. The Diocese obtained a land for the purpose along the Kandy Road and has started the Day Care Centre for about 60 children under five in a semi-permanent structure. This was declared open by the Bishop of the Diocese on Wednesday the 1st of March at about 12.00 noon in the presence of a large gathering from the village. Among those who spoke at the function were the Chairman of the local Rural Development Society and also the Grama Sevaka of the area. On behalf of the public, they thanked the Diocese for this service they are rendering to the poor community and urged the Diocese to start more ventures for the development of the area. The Rev. D. S. Thiagarajah who is managing the Centre is now busy putting up permanent buildings to house the Day Care Centre and other activities.

## Mr. Noel A. Vimalendran.

Mr. Noel A. Vimalendran of the Staff of Jaffna College, Vaddukoddai was selected by the N. C. C. of Sri Lanka to follow a graduate course at the Ecumenical Institute, Bossey, Switzerland. Mr. Vimalendran, followed this course from October 1988 to February 1989. The theme of the course was "Justice, Peace & Integrity of Creation" which is also the theme of the next assembly of the World Council of Churches to be held in 1991. Mr. Vimalendran having successfully completed the course returned to Jaffna on the 2nd of March and resumed work at Jaffna College. He has been put in charge of the Computer Teaching Programme at the College. He has also been appointed Treasurer of the Diocese at the last meeting of the Diocesan Council.

## Conference on Pre-School Education.

The C. S. I. Synod in collaboration with the E. Z. E. Organisation of West Germany organised a high level consultation on Pre-School Education at the Vishranthi Nilayam at Bangalore, South India, from the 18th to the 21st of February this year. Mrs. Ruth Mann, Director of the Further Education Centre at Uduvil Girls' College and Mrs. Lily Navendranugoolan, Warden of the St. Peter's Church — Day Care Centre, Vavuniya, attended this consultation from the Jaffna Diocese of the Church of South India. They have come back with fresh ideas which may be implemented in the Training Programme at Uduvil and in the running of the Day Care Centres.

## Day Care Centre at Pungudutivu.

The Day Care Centre at the Pungudutivu Church, started about a year ago has been faced with the handicap of a permanent building for its purpose. The Diocese was able to solve this satisfactorily when on the 25th of February it purchased the land adjacent to the Pungudutivu Church compound, 14 1/2 lachams in extent on the East of the compound. The land also has a fairly spacious house which was originally built by its then owner Mr. A. G. Nagalingam, a well known Head Master and member of the Pungudutivu Church earlier in this century. The Day Care Centre is now housed in this compound in the spacious house, and has been able to take on more students.

## KNH Project Officer for the North & East of Sri Lanka.

Mrs. Thaya Thiagarajah, wife of the Rev. D. S. Thiagarajah of Mankulam has been rcently appointed Project Officer for the North and East of Sri Lanka to work as an associate with Mr. Shirley Fernando, the Project Officer of SLCK from the 1st of April, 1989. Mrs. Thiagarajah is a Science graduate who has shown a great deal of interest in children's work. Her pioneering efforts in building up the Delft Day Care Centre and later the Day Care Centre at Mankulam have been highly commended by the KNH authorities. Two years ago she along with her husband worked as missionaries in residence for one year in the Indiana-Kentucky Conference of the United Church of Christ, U. S. A.

## SABA — THE GREAT SPORTSMAN.

SABALINGAM was a great sportsman during his days. While at his old school Jaffna Hindu, he shone as a good Goalkeeper in football. Then he represented the College Cricket team. Also after entering the Varsity, he was in the team as a top Goalkeeper. He was also a top class soccer referee. He comes from a sporting family. His brother Canagalingam was also a good Custodian in his days. The Jaffna sports loving people will surely miss SABALINGAM a great deal.

## SOCCER.

### REFEREES GRADING EXAM.

Referees Grading Exam for Football Referees was held on the 25th of February at St. Patrick's College Grounds.

There was a medical Test conducted by Dr. Philipps and a physical fittness test. After wards a written exam paper and a viva-voce. Many took part in this exam.

Messrs: Canagalingam, Arumugam, Mariathas and Kumariah organised the programme so well. They should be congratu ated for it.

## Memorial Service.

A Service to thank God for the life and witness of Mrs. Elizebeth Jeyeranee wijeyathason and Mrs. Joyce Athisayaranee Thavarajah both of whom died under tragic circumstances on the 15th of February 1989 (Parliamentary Election day), was held at their residenec at udupiddy on Thursday the 13th instant.

The Service was led by the Rt. Rev. D. J. Ambalavanar. Mrs. Jesudason, the Sister-in-Law of the late Mrs. Wijeyathason sang a Thevaram. The Lessons were read by Miss Emily Thavaranjini Jesudason and Rev. V. N. Tharmakulasingam.

Mrs. L. K. Thevarasa, a member of the Udupiddy Church paid the tribute. She said that Mrs. Wijeyadason and Mrs. Thavarasa were two loving Sisters. They loved their brothers, their Mother and their Children, and were prepared to, make any sacrifice for their wellbeing. The two sisters were very much interested in the work of the church and both served as teachers in the church nursery school. They helped in the choir and the Sunday School. When people were afraid, these sisters used to comfort them. Wherever they went they were together. In death also nobody was able to put them asunder. They have gone together to meet their creator. Eventhough they have gone beyond the veil, their memory is blessed. Rev. D. C. Ratnasingam preached the Sermon. He expounded the experiences of Gedeon who asked "why all these things should happen to us?"

After the meeting refreshments were served to all those who were present. Mrs. Wijeyathason and Mrs. Thavarajah leave behind their husbands, Mrs. M. N. Veeravagu their mother and their brothers Mr. V. G. Canagasingam, Rev. V. N. Tharmakulasingam Mr. V. G. Balasingam, and Mr. V. J. Rajahsingam. The late Mrs. E. J. Wijeyathason had two sons, while Mrs. J. A. Thavarsa had only one son.

At Rest,

Mrs. C. R. Ratnasingam.

We regret to record the death which occurred on 13-4-89 at the Jaffna Government Hospital of Rosebelle Ranee Ratnasingam, wife of the late Mr. C. R. Ratnasingam, (former Supervisor of the Lower School at Jaffna college) and daughter of the late Mr. W. D. Niles, former District Judge, Jaffna.

The Funeral Service was held at her residence on the 14th of April, 1989 at 3. 30 P. M. Rev. D. C. Ratnasingham officiated at the Service. Rev. Sevak Sam Alfred preached the Sermon and paid the tribute.

She leaves behind her three daughters, Suganthi Virasinghe (Jaffna College), Rajini (Manipay Hindu College) and Suvendrini (St. Henry's College, Illavalai). Mr. Laskshman Ratnasinham son, of Commercial Company and her daughter-in-law, Dr. (Mrs) Lily Ratnasingham of Lady Ridgeway Hospital, Colombo.

HOUSE OF HOPE.
(Home for the Disabled Children),
INUVIL.

WANTED
ASISTANT WARDEN.

Wanted a Resident female Assistant Warden to look after disabled Children.

Ability to play musical instruments will be an added qualification.

APPLICATIONS CLOSE:
1st May, 1989.

APPLY to:
THE MANAGER,
House of Hope,
Inuvil,
CHUNNAKAM.

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்.

மலர் 149 21 - 04 -1989 [ இதழ் 16


## சிந்தனை 14.

### எது நல்லது?

யோவான் 4:11 — 26.
யோவான் 9: 26 — 29.

உணர்வுகள் தூங்குவதும் தவறு- உயரிய நோக்கு அஸ்தமனம்ஆவதும் தவறு. தவறுகள் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் நிறைவான நன்மைகள் குறைவுபட்டுவிடும். உணர்வுகள்என்று உணரும் இடத்து உரிய இடம்பெறும் உணர்வுகள் :- தன் நாட்டுணர்வு, மொழியுணர்வு, பாரம்பரிய உணர்வு, சமய உணர்வு.

இவை நான்கும், தனிமனித சமூக அரசியல் வரலாற்றிலே முதலிடம் பெற்று முறுக்கேற்றப்பட்டவை இவ் உணர்வுகள் கடினம் ஆகும்போது, பல்வேறுபட்ட துன்பங்களை மனித இனம் அனுபவிக்கும் வாய்ப்பு உண்டு.

தன்னுணர்வுகளை மதிக்கவும் துதிக்கவும் வேண்டும். பிறரின் உணர்வுகளைச்சபிக்கவும் கூடாது- மிதிக்கவும் கூடாது.

பிறரின் உணர்வுகளைத் தன்னுணர்வுபோல் மதிக்காது விடும்போது, கறைபடிந்த சரித்திரம் தொடர்கதையாகிவிடும்.

நீதி நெறிச் சட்டக்கோவை, வளைந்து கொடுக்கும் தன்மை அற்றதனால் மனித வரலாற்றில் குற்றவியல் குறைவுபட வாய்ப்பு இல்லாது போய்விடும்.

மனித உணர்வுகள் வளைந்து கொடுக்கும் இயல்புடையதாக இருந்தால், கூட்டு வாழ்வை விரும்பும் மனிதகுலம், இனிமையான வாழ்வை அனுபவிக்க முடியும். இனிமையான வாழ்வைத் தரவந்த இயேசு, மனித உணர்வுகளை மதித்து அவர்களை உயர்வானவாழ்விற்காக, திறந்த வாசல் வழியாக அழைத்தார். அழைப்பின் சத்தம் கேட்ட அனேகர், அவ்வழி சென்று இன்பம் கண்டனர்.

இக்காட்சி கண்ட யூதர்கள், தூங்கிக்கிடந்த தமது பாரம்பரிய உணர்வுகளைத் தட்டிஎழுப்பி விட்டார்கள். இவ்வுணர்வலைகள் அமைதியைக் குலைத்து - அன்பைக் கெடுத்து - அழிவுக்கு வழிவகுத்தது என்றே சொல்லுதல் வேண்டும். மறுவாழ்வு தரவந்த இயேசுவுக்கும், அவர் பணி தொடர்ந்த மக்களுக்கும், இவர்களின் உணர்வுகள் தடைக்கற்களாகி இடர்பல செய்தன.

இடர்பல கண்டும், தம்பணி தொடராது நின்றார் அல்ல. பணிவிடைக்கென்று, வந்தபார்புகழ்பணிவிடை வள்ளல் கிறிஸ்து. அவர் தம் துணிவு, மக்களையும் அவர்பணி தொடர முன்னேக்கித் தள்ளியது. முன்னேக்கித் தள்ளப்பட்ட ஒரு குருடனையும், அவன் பெற்றுக்கொண்ட புதுவாழ்வின் பேர் அறிக்கையையும், அவனின் புனிதமான அறிக்கையைச் சாடுகின்ற பாரம்பரிய உணர்வு என்ற வைரம் ஏற்றப்பட்ட யூத மக்களையும்தான், யோவான் 9: 26 — 29 ஆம் பகுதியில் வாசித்து அனுபவிக்கின்றோம்.

பாரம்பரிய உணர்வினால் உரம் ஏற்றப்பட்டவர்கள், உண்மையை ஏற்கவும் மறுக்கின்றார்கள். நன்மை பெற்றவனையும், அவனுடைய பெற்றோரையும், தமது ஐக்கியத்தில் இருந்து விலக்கவும் துணிகின்றார்கள். இவர்களது மறுப்பிற்கும் துணிவுக்கும் காரணம், இவர்களது வாழ்வில் இழையோடி விட்ட கடினமான உணர்வுகள்தான்.

இன்றும், கிறிஸ்தவ ஐக்கியம் அருகியும் குறுகியும் வருவதற்குக்காரணம்?பாரம்பரிய உணர்வுகள் என்றுதான் சொல்லவேண்டும். ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு பாரம்பரிய உணர்வு உண்டு. உணர்வுகள் அவசியமானவை. ஆனால் அவைகளே, சபைகளின் முதுகெலும்பு என்று சொல்வதுதான் தவறு. சபைகளின் முதுகெலும்பாக நிற்பவர் மெய் வாழ்வு தந்த கிறிஸ்துவே.

பாரம்பரிய உணர்விலே நின்ற யூதர்கள், தமது வரலாற்றிலே மையமாக நின்ற மோசேக்கு மதிப்புத்தந்தார்கள். இவர்களைப் பார்த்து, எபிரேய நிருப ஆக்கியோன் 3: 3 வசனத்தில் கூறுவது, மோசேயைப் பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரர் என்பதையே. இவ்வாறு கூறி, பாரம்பரிய உணர்வுகளால் கட்டுப்பட்டு இருந்த யூத கிறிஸ்தவர்களைக் கடினமான பாரம்பரிய உணர்வில் இருந்து விடுவிக்க விரும்புகின்றார் நிருப ஆசிரியர்.

சபை வரலாற்றிலும், பாரம்பரிய உணர்வு தலைதூக்கி, இறை வரலாற்றுத் திட்டத்தை மறைந்த போது, பவுலடிகளார் வழிவிலகிய சபையின் உணர்வுகளைச் செல்ல வேண்டிய திசைக்குத் துடுப்புக் கொண்டு திரும்புவதை, 1கொ 12 — 14 வசனங்கள் கூறுகின்றன. இன்றும் கிறிஸ்துவை மறந்து, பாரம்பரிய உணர்வுகளுக்கு மதிப்புத்தந்து வாழும் நமக்கு, பவுலடிகளார் தரும் விடை, 1 கொ 1; 12 - 14 வசனங்களிலேயே தரப்படுகின்றது.

வைரமான பாரம்பரியஉணர்வுகள், உண்மைப் பொருளை நாமும் தெரிந்து அனுபவிக்க மறுக்கும், தடுக்கும் என்று அறிந்து, இவ்வுணர்வுகளில் இருந்து விடுபட்டு யோவான் 4: 11 - 26 ஆம் வசனங்களுக்குள் சென்று, அங்கே நடந்த உரையாடலில் இருந்து நமது மெய்வாழ்வின் பயணத்தைத் தொடருவோம்.

சமாரியப் பெண்ணுக்கும் கிறிஸ்துவுக்கும் நடந்த உரையாடலிலும் இப்பெண், தனது பாரம்பரிய உணர்வைவிட்டுக் கொடுக்காது பேசுவதைப்பார்க்கின்றோம். பின்னேக்கிப்பார்க்கும் போது, படிப்படியாக இவளுடைய உணர்வுகள் மறைந்து, தன்னுடன் பேசியவர் யார் என்று அறிந்து அனுபவித்துவிட்ட இவள், தான் அனுபவித்ததைச் சொல்லச் புறப்பட்டுவிட்டாள். இரண்டு வேத பாகங்களையும் வாசித்து இன்று நாம் உணர்வது, ஒரு கூட்டம் மக்கள், பாரம்பரிய உணர்விலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் என்பதையும் இன்னொரு கூட்டம் மக்கள் பாரம்பரிய உணர்வை வைத்து உண்மை எது என்று அறிய ஆசையுடையவர்களாக இருக்கும் மக்கள் என்பதையுமே. அன்றும் இந்த இரண்டு வகையான மக்கள் வாழ்ந்தார்கள் - இன்றும் வாழுகின்றார்கள். சபைகளிலும் - சமுகத்திலும்- அரசியலிலும் இவர்களைக்காண்கின்றோம்.

உண்மையும் நன்மையும் எது என்று அறியத் தம்தமது பாரம்பரிய உணர்வுகளைச் சிறிது தளர்த்திவிட்டுக்கொடுக்கும் போது, அந்த உணர்வுகள் புதுப்பெலன் அடைந்து புனிதமும் பெறும். புனிதமான எவையும் ஐக்கியத்திற்கு அடிகோலும்.

நமது உணர்வுகள் யோ 9:26 - 29 ஆம் வசனங்களுக்கு உட்பட்டதா? யோ 4; 11 - 26ஆம் வசனங்களுக்கு உட்பட்டதா? நம்மை நாமே ஆராய்ந்து, நமது விசுவாச ஓட்டத்தை, கிறிஸ்துவைப் பார்த்து ஓடுவோம். நாமும் வாழவேண்டும் - நமது சபையும் புதுவாழ்வு பெறவேண்டும் - நாடும் ஐக்கியத்தை அனுபவிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் உள்ளங்கள், இப்பணியைத் தொடரவேண்டும்.

துறைஊரான்

ஆ. வ. யேசுதாசன்.

⁂ ⁂ ⁂ ⁂ ⁂

## செய்திகள்:

### தபாற் சேவை.

வாரத்தில் ஆறு நாட்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தபால் பொதிகளை எடுத்து வரவும், இங்கிருந்து கொழும்புக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இச் சேவையை நடத்துவதற்கு, இலங்கைப் போக்குவரத்துச்சபை சம்மதித்துள்ளது. இவ்வாறு, தபால் அத்தியட்சர் திரு. எஸ். கனகரத்தினம் 13.3.89 ஞாயிற்றுக்கிழமை, கொக்குவில் தாபலகக்கட்டிடத் திறப்பு விழாவின்போது தெரிவித்தார்.

### உங்களுக்குத் தெரியுமா?

பாவிக்கப்பட்ட எக்ஸ்றே படக் கடதாசியிலிருந்து வெள்ளியைப் பிரித்தெடுக்கும் புதிய இரசாயன முறை ஒன்றை, கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. இவ்வாறு பிரித்தெடுக்கும் வெள்ளி, பலகைத் தொழில் முயற்சிகளுக்கும் உதவுமென அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

### இளஞாயிறு.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவ சஞ்சிகையான 'இளஞாயிறு' பத்திரிகையின் ஆசிரிய குழுவினர், புதிய நியமனம் பெற்ற கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கட்கு, விருந்துபசார விழா ஒன்றை நடத்தினார்கள். இவ்விழாவில் பதிலுரை நிகழ்த்திய கலாநிதி ஜெபநேசன் அவர்கள், "வாசிப்பு, மனிதனைப் பூரணமாக்குகிறது - எழுத்து, மனிதனைச் சரிநுட்பம் உள்ளவனாக்குகிறது - மகாநாடு, ஒருவனை ஆயத்த நிலையில் வைத்திருக்கின்றது" என்று பிரான்சிஸ் பேக்கன் கூறியிருப்பதை மாணவர்கள் எல்லோரும் மனதில் கொள்ள வேண்டும், என்று கூறினார். ஆங்கிலப் பத்திராதிபர் திரு. என். ஸ்ரீபதி, தமிழ்ப் பத்திராதிபர் திரு. ஆர். சந்திரகுமார் ஆகியோர், கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள், எழுத்துத்துறைக்கு வழங்கி வரும் உற்சாகத்திற்குத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். 'இளஞாயிறு' பத்திரிகையின் ஆங்கிலப் பகுதி ஆலோசகர் செல்வி ஸ்ரெலா செல்லத்துரையும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

### வாலிபர் சங்கப் பணி.

நவாலி - திருச்சபையின் வாலிபர் சங்கம், பரிசுத்த வார ஆராதனைகளைச் சிறப்புடன் நிறைவேற்றியது. குருத்தோலை ஞாயிறு, பெரிய வெள்ளி, உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆகிய கிழமைகளில் நடாத்தப்பட்ட ஆராதனைகள் சபையாரைக் கவர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. பிரபல பேச்சாளர்களினால், இவ்வாராதனைக் காலங்களில் அருளுரைகள் வழங்கப்பட்டமை நேர்த்தியாகவும் ஆசியாகவும் அமைந்திருந்தது.

உயிர்த்தெழுந்த திருநாளன்று பவனியுடன் ஆரம்பமாகி, வாலிபர் சங்கத்தின் ஆராதனையுடன் நிகழ்ச்சிகள் இனிது நிறைவேறின. பரிசுத்த வார காலங்களில், பொது கிறிஸ்தவ ஸ்தாபனங்களிலும் நிகழ்ச்சிகளிலும் வாலிபர் சங்கம் கலந்து கொண்டது. தொடர்ந்தும், தனது நற்பணியை மேற்கொண்டு வருகிறது இவ்வாலிப சங்கம்.

### யாழ்ப்பாணக் கல்லூரி.

தற்போது, யாழ். கல்லூரியின் கல்வித் தராதரத்தை உயர்த்துவதற்குச் சகலதுறைக் கல்விகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இத் துறைகளில் ஆசிரியர்கள் திறம்பட இயங்குகிறார்களென்பதை அவ்வாசிரியர்களின் குறிப்பேடுகளும் மாணவர்களின் கல்வித் தராதரங்களும் எடுத்துக்காட்டாக இருக்கின்றன, என்று யாழ். கல்லூரி அதிபர் கலாநிதி சு. ஜெபநேசன் அவர்கள், 5 - 4 - 89 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு, யாழ். கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் தலைமையுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராகப் புரொபெசர் ஏ. துரைராஜாவும் அவரது பாரியாரும் கலந்து கொண்டார்கள். இவ்விழா, சிறுவர்களின் இன்னிசைக் கீதங்களுடனும் பாடசாலை மாணவர்களின் பேச்சுக்களுடனும் ஆரம்பமாகியது. அதிபர் தமது தலைமை உரையில், கல்லூரியில் தற்பொழுது 1374 மாணவர்கள் கல்வி பயிலுகிறார்கள் என்றும் அதில் 908 ஆண்களும் 466 பெண்களுமாவர் என்றும் கூறினார். லண்டன் சாதாரண,உயர்தர வகுப்புக்களில் 34 மாணவர் கல்வி பயிலுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். பிரதம விருந்தினர் புரொபெசர் துரைராஜா தமது உரையில் இரு விஷயங்களை வலியுறுத்திக்கூறினார். அதாவது, இலங்கையில் தற்காலத் தமிழ்மாணவர்களின் வருங்காலக் கல்வியும், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி நிலையும் பற்றியவிடயங்களே. அதனால், தமிழராகிய நாம் எமக்குக்கிடைக்கும் தருணங்களையும் இயற்கை மூலப்பொருட்களையும் பயன்படுத்தித் தொழில் செய்ய வேண்டும். கல்வியைப் பொறுத்தவரையில் மாணவரின் பெற்றோர் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் மட்டும் தங்கியிராமல், யாழ்ப்பாணத்தில் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள "திறந்த பல்கலைக்கழகத்தையும்" (Open Univessity) பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மேலும் பல ஸ்தாபனங்கள் திறக்கப்பட்டு, எங்களுடைய இயற்கை வளங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். உதாரணமாக, மீன்வளர்ப்பில் எமது இளம் தலைமுறையினர் பயிற்றுவிக்கப்பட்டால், பெரும் பணம் சம்பாதிக்கலாம் எனவும் கூறினார். திருமதி துரைராஜா மாணவருக்குப் பரிசில்களை வழங்கினார். கல்லூரியின் மாணவ தலைவர் என். நித்தியராஜனின் நன்றியுரையைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா இனிது முடிவுற்றது.

**தாரகை ஒளி:-**

வெவ்வேறும் நிறைகற்கள் கர்த்தர்க்கரு வருப்பு;
கள்ளத் தராசும் அவர்க்குநன் றல்ல.

# எங்கள் கருத்து

## அருட்தொண்டும் நற்செய்திப்பணியும்.
### (MISSON AND EVANGELISM)

அருட்தொண்டும் நற்செய்திப்பணியும், திருச்சபையின் முதுகெலும் பாகும். திருச்சபையினை நெருப்புத் துண்டுக்கு ஒப்பிட்டால், இத்திருப் பணியினை அந்நெருப்புத் துண்டிலிருந்து எழும்பி ஒளிரும் தழலுக்கு ஒப்பிடலாம். தழல் தணிந்தால் நெருப்பு நீர்த்துவிடும்,

அதேபோல, அருட்தொண்டும் நற்செய்திப்பணியும் பிரிக்கப்பட் டால் அல்லது ஒதுக்கப்பட்டால், திருச்சபையின் உருவே மறைந்துவிடும், இத்திருப்பணி, திருச்சபையின் வாழ்விற்கு மிக்க அவசியமானது. இதுவே திருச்சபையின் உயிர்நாடி, எனவே, சபையார் அனைவரும் இப்பணி யில் ஈடுபடவே, கிறிஸ்துபிரானால் தாங்கள் அழைக்கப்பட்டுள்ளோமென உணர்வது அவசியம்.

இன்று உலகெங்கும் திருச்சபை பரவியுள்ளது. இதன் உறுப்பினர் கள் நூற்று ஐம்பது கோடி கிறிஸ்தவர்கள். இந்த எண்ணிக்கை, உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்காகும். இப்பெருந்தொகையான கிறிஸ்தவர்கள், ஒன்றுபட்டு வாழ்வதாக இல்லை. இவர்கள், ஒரே கிறிஸ்துவை வணங்கினாலும், உலகத்திருச்சபை சுமார் 9000 கூறுக ளாகச்சிதைவு பட்டு, சீர்குலைந்து காட்சியளிப்பது கவலைக்கிடமானதே.

புதிய வானம், புதிய பூமி பற்றிய திருமறை வாக்கு நிறைவேற வும், அன்பு - சமாதனம் - நீதி போன்றவை இவ்வுலகில் தழைத்திடப் பாடுபடவும், நாம் எம்பெருமானால் அழைக்கப்பட்டுள்ளோம். இதுவே நமது தலையாய கடமையுமாகும். இதனை, சபையார் அனைவரும் அறிந்து செயற்பட, அவர்களுக்கு வேண்டிய பயிற்சி அளிப்பது குரு மாரின் கடமையாகும்.

இன்று நாம் காண்பது, மனிதனின் பொறுப்பற்ற தன்மையையும், இறைவனின் திருச்சித்தத்தை அறவே புறக்கணிக்கும் அவல நிலைமையை யுமே. பாவமானது, மனிதரை இறைவனிடமிருந்தும், இயற்கையிட மிருந்தும் பிரித்து விட்டது. மனிதனின் சுயாதீனம் பாதிக்கப்பட்ட தோடு, பொருளாதார அமைப்புக்கள் சார்பு நிலையை அதிகரித்து முள்ளன.

எனவே மக்கள் கூட்டமும் நாடுகளும் மனந்திரும்பவேண்டும்- இது வலியுறுத்தப்பட வேண்டும். கிறிஸ்துவின் வழியாக இறைவனோ டும், சகல மனிதரோடும் புதிய உறவு கொள்ள, மக்களை நாம் அழைக்க வேண்டும் - பாவ மன்னிப்பை அருளவேண்டும். இதற்காகவே, திருச் சபை இவ்வுலகில் நிறுவப்பட்டது.

இயேசுவைப் பற்றிக் கேள்விப்படாத மக்கள் எண்ணிக்கை, நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறது, இம்மக்களில் பெரும்பான்மை யோர் ஏழைகளே. இறையரசு இவர்களுடையது என்ற ஆண்டவரின் வாக்குறுதியை நாம் உணரும்போது, திருச்சபை, தன்சாட்சியில் பெருகு வதும், இம்மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டியதும் அவசி யம்.

நீதிக்காகவும் - விடுதலைக்காகவும் - உரிமைக்காகவும். மககள் போரா டும் இந்நாட்களில் நம்பிக்கையிழந்து தவித்துக் கொண்டிருக்கும் இவ் வேழை மக்களுக்கு, இறையரசு இவர்களுக்குத்தானென வாக்குறுதி செய்யப்பட்டுள்ளதென்ற நற்செய்தியை அறிவிப்பது முக்கியம்.

பணக்காரரால் ஒதுக்கப்பட்டும் தள்ளப்பட்டும் மனம் நொந்த நிலையில், போதைதரும் மருந்துகளினாலும், இரகசிய வழிமுறைகளினா லும், இன்பமும் ஆறுதலும் பெறுவதற்காக மக்கள் அலையும்போது இயேசு பெருமான், இத்தகைய மக்களுக்கு மெய்வாழ்வை அளிக்க- அதனை முழுநிறைவாகக் கொடுக்க (யோ: 10 :10) ஆயத்தமாயிருக் கிறார் என்ற செய்தியை அறிவிக்க வேண்டியது நமது கடமை.

நற்செய்திப்பணியும் அருட்தொண்டும் ஒன்றாக இணைந்து செயற் பட வேண்டிய காலமிது. இதனையுணர்ந்து செயற்பட, நமது சபை களைத் தூய ஆவியானவர் உயிர்பிக்க வேண்டுமென மன்றாடுவோ மாக.

## தந்தை செல்வாவின் பிறந்த தினக் கொண்டாட்டங்களின் வரலாறு.

தந்தை செல்வாவின் 91 வது ஜனன தினத்தை 31 - 3 - 89 லும் அன்னாரின் 12 வது சிரார்த்த தினத்தை 26 - 4 - 89லும் கொண்டாடுவதற் கும் அனுட்டிப்பதற்கும் தயாராகி வரும் தமிழ்த்தேசிய இனம், தனது தேச பிதாவின் குணாதிசயங்கள் சில வற்றை நினைவு கூருவது, மேற்படி வைபவங்களின் சிறப்பிற்குப் பெரி தும் உதவக்கூடும்.

தந்தை செல்வா, ஜீவிய காலத் தலைமைத்துவத்தை விரும்பாதவர். தாம் நிறுவிய இலங்கைத் தமிழர சுக்கட்சியின் தலைமைப் பதவியை, அமரர் வன்னியசிங்கத்திடம் கைய ளித்து விட்டு, ஒதுங்கிக் கொள் வதே அவரது விருப்பமாக இருந் தது.

ஆயினும், 1952 ஆம் பொதுத் தேர்தலில் தந்தை செல்வா தோல்வி யடைந்ததற்காகவும், தேர்தல் முடிவை ஆட்சேபித்து அவரால் தொடரப்பட்ட தேர்தல் வழக்கில், எதிர்த்தரப்பாருக்கு ரூ. 40 000/, செலவு தொகையைச் செலுத்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் நிமித்தமாகவும் தமிழரசு இயக்கம், ஆசியல் தலைமையில் இருந்து தந்தை செல்வா அகல்வதை உடனடியாக அனுமதிக்கவில்லை.

# பொல்லாத காலம்.

பொல்லாத காலம் எங்கிருந்து வந்ததையோ
செல்லாதோ என்னாவி சீர்கெட்ட உலகைவிட்டு

இக்கால மக்களுடை இழிவாழ்வை எண்ணுகையில்
சுக்காகி என்னெஞ்சம் தூள்தூளாய்ப் பறக்குதையோ

குந்தியிருந்து படித்ததெல்லாம் அந்தக் காலம்
குந்திக்கொண்டே குடிப்பதெல்லாம் இந்தக் காலம்.

மூடிவைத்தும் அழகைக்கண்டது அந்தக்காலம்
மூடிவைத்தால் முழங்கால் அழுகுது இந்தக்காலம்

காதல் காதல்என்று கன்னியரும் காளையரும்
போதை பிடித்துப் புரளுகின்றார் புத்திகெட்டு

கிராமத்தும் தெருவோடு கேட்பாரார் பாவையரை
பராமரித்து மேனிதனைப் பார்வையிடக் காட்டுகின்றார்.

உப்புக்கும் உழைக்காமல் உடலே நலுங்காமல்
எப்போதும் நம்மிளைஞர் எங்கெங்கோ அலைகின்றார்

தேவாரம் தெரியாத தெறிகெட்ட சிறுவர்
நாவாரப் பாடுகின்றார் நாளாந்தப் படப்பாட்டு

பணமாவுங் கிட்டாத படுபஞ்சம் நேர்ந்தாலும்
சினிமாவின் மோகம் சிலபேரை நீங்கவில்லை

உழைத்துழைத்தே உருக்குலைந்து உணவிற்கும் வழியின்றி
மழைக்கொழுகும் குடிசையிலே மாளுபவர் பலரையோ

பகட்டான உடையாவும் பல்வகையாம் பணியணியும்
முகட்டை முட்டும்வீடும் மோட்டார் வாகனமும்

முழுவின்பம் பற்பலவும் வாய்த்தும் வாழுகின்றார்
ஊழின் வலியோ உலகேசன் திருவுளமோ

ஏதுமறியேன் நான் இனியிருக்க விருப்புமில்லை
சாதலோ! இன்றேனினும் சந்தோசம்! சந்தோசம்!!

கே. அருணானந்த கணேஷ்.

ஆகவே, தந்தை செல்வா அதன் பொருட்டு, சில ஆண்டுகள் காத் திருக்க நேர்ந்தது. ஆயினும், தம்பி வா- தலைமை தாங்க வா என்று அறிஞர் அண்ணா நெடுஞ்செழிய னைத் தலைமை ஏற்க அழைத்த அதே பாங்கில், திருமலை மாநாட் டில் அமரர் வன்னியசிங்கத்திடம் தலைமைப் பதவியைக் கையளித் தார். தந்தை செல்வா, இயக்கத் தில் ஏற்படுத்திய அப் பாரம் பரியத்தின் வழியாக இராஜவரோ தயம், இராசமாணிக்கம், டாகடர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகி யோரை அடுத்து, மல்லாகம் மகா நாட்டிலே தமிழரசு இயக்கத்தின் தலைவராக அ. அமிர்தலிங்கம் தெரி வாகினார். அதுவே, இலங்கையின் ஏனைய அரசியல் இயக்கங்களுக் கும் தந்தையின் இயக்கத்துக்கு மிடையே இருந்த "ஜீவிய கால தலைமைத்துவ" வேறுபாடாகும்.

இரண்டாவதாக, தனிநபர் துதியை விரும்பாதவர் தந்தை செல்வா. இயக்கமும், இயக்கதின் ஒற்றுமையும் அதன் குறிக் கோளுமே தந்தை செல்வாவுக்குப் பிரதானமானதாக எப்போதும் இருந்துவந்தது. தந்தை செல்வா வைப் பொறுத்த மட்டில், இயக்கத் தின்குறிக்கோள்வேறாகவும் அவரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை இன்னொன்றாகவும் இருந்ததில்லை.

அதனால்தான், தந்தை கையெழுத் திட்ட இருவேறு ஒப்பந்தங்களி லும், தமிழரசு இயக்கத்தின் குறிக் கோளான சமஷ்டியின் சாயலையே காணக்கூடியதாக இருந்தது. அதுவே, தந்தை அளித்துவந்த மானசீகத் தலைமைத்துவத்தின் தனிச்சிறப்பான முத்திரையாகும்.

தனிநபர் துதியை விரும்பாத தந்தை செல்வாவின் ஜனன தினங் கள், ஏன் கொண்டாடப்படலாயின என்பது ஒரு நியாயமான கேள்வியே.

தந்தை செல்வாவின் ஜனன தினத்தைக் கொண்டாடும் மரபை ஏற்படுத்திய பெருமை, மட்டக் களப்பு மக்களையே சேரும். தந்தை செல்வாவின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கான சகல ஏற்பாடுகளையும், தந்தையைக் கலந்தாலோசியாது செய்துவிட்டு, வைபவத்தில் கலந்து கொள்ள வரு மாறு தந்தைக்கு அழைப்பு விடுக் கப்பட்டது. தனிநபர் துதியை விரும்பாத தந்தை, முதலில் மறுத்துவிட்டார். மட்டக்களப்பு மக்களின் ஜனநாயக விருப்பம் அது என வற்புறுத்தப்பட்டபோது, அந்த அன்பிற்குத் தந்தை செல்வா கட்டுப்பட்டார். மலர்க்கிரீடம் சூடி, தந்தை செல்வாவின் ஜனன தினக் கொண்டாட்டங்களுக்கு வழிகோலிய பெருமை, முற்று முழுவதுமாக, மட்டக்களப்பு மக் களையே சேரும். பெற்றம்மா.

* * * *

## வேதனையில் வெற்றி.

"கண்ணீரோடு விதைக்கிறவர் கள் கெம்பீரத்தோடே அறுப் பார்கள் (சங் : 126: 5).

கடலில் மூழ்கிக்கிடந்த ஒரு முத்துச் சிப்பியை, ஏதோவொன்று உறுத்திக்கொண்டேயிருந்தது. உறுத்திக்கொண்டிருக்கும் அப் பொருளை அகற்றிவிட, எவ் வளவோ முயன்றும் முடியவில்லை. "என்ன செய்வது? இந்த உறுத்தலி னால் உண்டாகும் வேதனையை, ஆயுள் பரியந்தம் சகித்துக் கொண் டிருப்பதா? வேறு வழியில்லையா?" என்று பதறி, முத்துச் சிப்பி ஏங் கிக் கொண்டிருந்தது.

வேதனை பொறுக்க முடியாமல் துடித்துக் கொண்டிருக்கையில், உறுத்துமிடத்தினின்று ஒரு கண்ணீர்த்துளிபோல் ஏதோ கசிந்து வடிந்தது. கண்ணீர்த்துளி தானோ?அல்ல.வேதனையைச் சகிக்கு மாறு அருளப்பட்ட ஒரு தைலம் அது. அதன், உடலிலிருந்தே தயாரிக்கப்பட்ட தைலம் தான் அது. ஆனால் தெய்வீக அருளால் அருளப்பட்ட தைலம். அந்தத்தைலம் பரவப்பரவ, வேதனை குறைந்து கொண்டே வந்தது.

வாரங்களும் மாதங்களும் கழிந் தன. திடீரென ஒருநாள் வேதனை மாயமாய்ப் பறந்து விட்டது.இதன் காரணம் என்னவென்று முத்துச் சிப்பி ஆச்சரியத்துடன் உற்று நோக் கினது. என்ன ஆச்சரியம்! உறுத் தின இடத்தில் இப்பொழுது ஓர் அழகிய முத்து ஒளிர்ந்தது. ஒரு முத்தா? ஆம் விலையுயந்த முத்து அது. முத்துச் சிப்பியின் கண்ணீர் முத்தாக மாறிவிட்டது! இதுதான் முத்துச் சிப்பியின் அனுபவம்.

நண்பனே, உன் வாழ்க்கை அனுபவத்தில் உன் வேதனை, கண் ணீர்த் துளி, முத்தாக மாறியுள் ளதா? உன்னைப் பாதிக்கும் இடத்தை, இறைவனின் அருள் நிறைந்த கரம் தொட்டால், உன்கண்ணீரும் முத்தைப் போன்று உன் வாழ்க்கையைச் சிறப்பிக்கும் இதை, அனுபவத்தில் கண்டாய ?.

*Editorial*

# PEACE PROSPECT.

There was evidently a note of forced cheer as people went about this festive season, stocking their pantry for the New year.

It was not that the prices of many consumer articles had gone up, or that housewives found themselves afloat in a turbulent sea of inflation, but that the land was facing a whole portfolio of problems. PEACE seemed a utopian goal.

Schools were closed at very short notice, ahead of schedule just when a very large number of newly recruited primary school teachers were going through their paces.

The most tantalising question in Eduction in Sri Lanka is:- "Is school a preparation for life or is life a preparation for school?"

In the North and East of the Island, where the political situation often tends to reach a dangerous flashpoint, the new year festivities this year — the first new year celebrations after the establishment of the new Provincial Council — were by no means euphoric.

A bomb explosion in the Trincomalee Town on 13. 04. 1989 claimed the lives of 45 people, injuring 54, according to news reports. In Jaffna where the Tamil heritage is still stoic, and religious rites play an important role in the new year festivities, a bomb exploded on 14. 04. 1989 in one of the thickly populated areas in the suburbs of Jaffna town — KANTHARMADAM, killing some 12 people, including pedestrians and cyclists and injuring seriously some 26 people (Murasoli 16. 04. 1989).

The rising spiral of civil violence in the country has been attributed to various causes and various remedial measures have been suggested. One obvious long term approach is to end poverty. The President's Janasaviya Scheme in this context has rightly been painted with a broad brush. We do hope the Scheme will bring into its scope as many as possible of the impoverished uses of the food stamps, some seven and a half million according to present estimates.

But the rankling historical grievances of the minorities cannot be wiped off by economic measures or by adroit negotiations that do not get to the root of the problem.

The new realities in the North — East scenario after the Elections are certainly not as dire as some fear. But at the same time they are not so benign as others hope.

The 1989 voter was not merely sophisticated but complex. "An open mind is all very well in its own way," said Samuel Butler, "but it ought not to be so open that there is no keeping anything in or out of it". Eleven years in the political woods had not blunted the voter's mental faculties.

The results of the Provincial Council Elections and the General Elections put together in the Eastern Province revealed the voter's firm conviction that ultimately the pragmatic if not the moral test of any political solution will be, if it has really helped to put 'Peace, together at the table. The EPRLF (uncontested in the North) has a majority in the Provincial Council. But EROS (which contested the Elections) has the major share in the Parliamentary seats in the whole Province which is now designated as the North Eastern Province of Sri Lanka.

Signs are not wanting that implacable lines in political thinking are now giving place to realism and a genuine desire to bring all 'groups' together in fashioning a new order for Sri Lanka. For, going ahead with an imprecise settlement will not be a tidy operation to end a conflict which has been so costly in human terms.

The conditions laid by EROS as a pre-requisite for their taking their seats in Parliament touch the core issues in the contemporary Political scene- release of Political prisoners, more powers to provincial Councils, the repeal of the Sixth Amendment, the withdrawal of the Referendum on the North—East Merger and the withdrawal of the IPKF (except perhaps a monitoring battalion).

Nobody can dismiss out of hand that the only way to end the conflict which has convulsed the country for nearly six years is to break the sinous and mirky complexity of Political developments in the country as for instance the reported attempt at the creation of a new district in Sri Lanka, when we are yet involved in problems posed in some of the existing 25 districts.

The bizarre run of events in the country in recent times, has unfortunately muddled the political picture and underscores with devastating force the truth of Eric Hoffer's lines:-

*"Far more crucial than what we know or do not know is what we do not want to know."*

Registered as a News paper at the G. P. O., Sri Lanka under No. Q/J/104/News /89

Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press, 182, 1st, Cross Street Jaffna on Friday 21 April 1989, and published by Rev T. THEVANESAN, 182. First Cross Street, Jaffna

## BISHOP STIRS UP CONTROVERSY.

The Bishop of Durham, who is no stranger to controversy, was once again in the news. He made headline news after having said in a television interview broadcast on Easter Sunday that he did not believe the resurrection of Jesus to be a physical one. His full statement on being asked his view of the resurrection was - "I don't think it means a physical resurrection. It means a spirtual resurrection, a transforming resurrection a real resurrection. To know he (Christ) is alive in eternity must be more than the encountering of a ghost".

His opinions appear to have upset traditional Christians. A few Conservative Members of Parliament promptly called for his resignation. The Archbishop of Canterbury when subsequently asked whether he believed the resurrection to be physical, he diplomatically answered by saying that "the resurrection is a mysterious thing - The important thing is the fact of the resurrection".

Readers may recall that David Jenkins (Bishop of Durham) caused similar controversy prior to his consecration by his statements on the virgin birth and Christ's miracles. When the York Minster, the Cathedral where he was consecrated, was subsequently struck by lightening some felt it was heavenly retribution ! This has prompted some to hope that the York Minster is well insured this time ! !

It is interesting that in a country where most of the population are non-practising Christians the statement of a cleric can still be the cause for sensation.

## THE SALMAN RUSHDIE AFFAIR.

The recent controversy over the book 'The Satanic Verses' by Salman Rushdie shows no signs of dying away. The most recent victims have been two moderate Muslim leaders in Belgium who were shot dead because they had been opposed to Ayatollah Khomeni's call for Salman Rushdie to be assassinated.

Here in Britain there was strong opposition to the publication and selling of the book by the Muslim community. Demonstrations and book burnings were organised around the country especially in towns like Bradford and Leicester where there are sizeable Muslim communities. However the great majority have rejected Khomeni's call for the death penalty for Rushdie saying that they would abide by the laws of the country. It was surprising to see that many young Muslims who had been born and brought up in Britain actually endorsed Khomeni's extreme pronouncement and in fact stated that they would be prepared to carry it out.

The whole incident was threatening to damage race relations, with many British feeling that the Muslim community and other immigrant ones should learn to abide by the local laws and regulations. The issue has served to start a debate within immigrant communities regarding their own future in the midst of such western societies.

## 1991 AND ALL THAT.

Here in Europe there is considerable excitment and speculation regarding 1992 when the E E C truly becomes a common market without trade barriers. Similarly for the Jaffna Diocese 1991 holds tremendous significance and challenge. Two important anniversaries fall in that year. The Diocese celebrates the 175 anniversary of the first American missionaries beginning their work in the peninsula. 1991 also marks the 150th year since the Morning Star was first published. 150 years in the life of any institution is a tremendous achievement.

For a paper that is the second oldest in the Island and the oldest in the North - even more so. Sad then it is that unless the morning star changes its present style and context radically there will be little to be proud of save a once glorious and fading past. Recent issues of the paper have not inspired hope of much changes. The news content is dated - there is little variety in content, and often important events — politically and within the Diocese are overlooked. Proof reading obviously a lot to be desired as typographical errors are numerous. It was hoped that with its own press these could be minimised. One cannot however blame it all on the staff of one or two who struggle to run the paper. Unless more within and without the Diocese take an active interest by contributing articles and suggestions, the Morning Star will continue to plod on in this colourless fashion. It should be made mandatory for all ministers to send in news of Diocesan happenings and programmes-those who do not ought to be penalised! I certainly hope things will improve so that 1991 would be a true celebration. This reader is certainly willing to do his bit.

## TRAGIC DEATHS.

The news of the brutal killings of the two sisters of the Rev. V. N. Tharmakulasingam came as a great shock to the Tamil Christian community here. The totally unprovoked and senseless murders brought home to Tamils here how little has changed for the civilians in the Tamil areas. The heartfelt sympathies of the Christian community here go to the Rev. Tharmakulasingam and his family.

Copies of the Bishop's letter to President Premadasa regarding this incident have been passed on to many organisations and Christian groups, including Amnesty International, the British Council of Churches, the Methodist Conference etc. It is hoped that by publishing this awful crime will create some awareness of the real situation in Sri Lanka. We hope the President's promise of an inquiry will bring to book the offenders and expose their role in Sri Lanka.